Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

13.05.2020 புதன்கிழமை

## கைது 52,126

கொழும்பு,மே 13
கடந்த மார்ச் 18 ஆம் திகதி நாட்டில் அமுல்செய்யப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமையை மீறிய 52 ஆயிரத்து 126 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன

2

## 382 பேர் மீண்டனர்! 498 பேர் சிகிச்சை!!

*105 பேர் கண்காணிப்பில்*

கொழும்பு, மே 13
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் பூரண குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 366 இலிருந்து 382 ஆக அதிகரித்துள்ளது. அந்த

2

# வாரத்தில் 7 நாள்களும் பாடசாலைகள் இயங்கும்!



**கல்வியமைச்சு ஆலோசனை**

கொழும்பு.மே 13
பாடத்திட்டங்களை விரைவாக முடிப்பதற்காக வாரத்தின் ஏழு நாள்களும் பாடசாலைகளைத் திறப்பது தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

2

## 382 பேர் குணமடைவு

கொழும்பு,மே 13
நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர். இதுவரை 382 பேர் குணமடைந்தனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு

2

## கொழும்பு, ஹம்பகாவில் ஊரடங்கு தளர்த்தப்படும்

*விரைவில் நடவடிக்கை என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்*

கொழும்பு, மே 13
கொழும்பு மற்றும் ஹம்பகா மாவட்டங்களில் விரைவில் ஊரடங்கு தளர்த்தப்படும் என்று தெரிவித்துள்ளார் சுகாதாரப் பணிப்பாளர் மருத்து

2

வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு வழக்கு:

## ராஜிதவை கைது செய்ய உத்தரவிட்டது நீதிமன்று

கொழும்பு, மே 13
முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இன்று பிற்பகல் உத்தரவு பிறப்பித்துள்ளது. வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில் ராஜித சேனரத்னவுக்கு கடந்த டிசம்பர்

2

## "சுடர் ஒளி" பெயரில் போலிச் செய்திகள்!

யாழ்ப்பாணம், மே 13
'சுடர்ஒளி' பத்திகையின் பெயரைப் பயன்படுத்தி முஸ்லிம் மக்கள் மத்தியில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபடும் விசமிகள் தொடர்பில் வாசகர்களும், மக்களும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.



தற்போது 'சுடர் ஒளி' பத்திரிகை மாலைப்பதிப்பாக மின்னிதழ் வடிவில் வெளிவந்து பலரின் ஏகோபித்த ஆதரவையும், மிகப்பெரிய வாசகர் வட்டத்தையும் பெற்றுவருகின்றது. இத்தகைய நிலையில் 'சுடர் ஒளி' பத்திரிகையில் வெளியான செய்திகளைப் போன்று போலிச் செய்திகளை வடிவமைத்து அவற்றை சமூக வலைத் தளங்களில் பதிவேற்றும் செயற்பாட்டில் விசமிகள் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் வாசகர்களும், மக்களும் அவதானத்துடன் செயற்படவேண்டும். 'சுடர் ஒளி' பதிப்பின் மின்னிதழ்கள் உத்தி யோகபூர்வமான 'வைபர்' மற்றும் 'வட்ஸ் அப்' குழுமங்களில் மட்டுமே வெளியாகும். வாசகர்கள் அவற்றை அங்கு பெற்றுக் கொள்ள முடியும்.
சமூக வலைத் தளங்களில் பகிரப்படும் போலிச் செய்திகளுக்கும் 'சுடர் ஒளி'க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவற்றுக்கு 'சுடர் ஒளி' எந்த வகையிலும் பொறுப்பேற்காது என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். (அ)

## மதுபான விற்பனை நிலையங்கள் திறப்பு

கொழும்பு,மே 13
கடுமையான நிபந்தனைகளுடன் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பகுதிகளில் இன்று முதல் மதுபான விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஹோட்டல், பப்கள் மற்றும் உணவகங்களில் உள்ள மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதேநேரம் ஊரடங்குச்

2

## கும்பலாகக் குவிந்த 'குடிமக்கள்'!

*கண்டுகொள்ளாத பொலிஸார்*

யாழ்ப்பாணம்,மே 13
ஆலயத் திருவிழாக்களுக்கு 10 பேருக்கு மேல் கூடுவதற்கு தடைபோடும் பொலிஸார் மதுபான விற்பனை நிலையங்களில் மட்டும் நூற்றுக் கணக்கானோர் ஒன்றுகூடியதை கண்டுகொள்ளாமல் இருந்தனர். நாடு முழுவதும் மதுபான விற்பனை நிலையங்கள் திறப்பதற்குத் தடை போட்டிருந்த

2



மாவட்டங்களுக்கு இடையில்

## திங்கள் முதல் பயணம் ஆரம்பம்



கொழும்பு, மே 13
மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் அது குறித்த பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாவும் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்

2

## சுமந்திரனுக்கு செருப்புமாலை

*அகற்றிச் சென்றது பொலிஸ்*

யாழ்ப்பாணம், மே 13
ஆயுதப் போராட்டம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின்

2

## 382 பேர்...

வகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 889 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 498 நோயாளிகள் 07 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் 111 பேரும், பொலன றுவை வெலிகந்தை ஆதார வைத்தியசா லையில் 37 பேரும், கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் 81 பேரும், சிலாபம் இரணவில வைத்திய சாலையில் 08 பேரும், மட்டக்களப்பு காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் ஒருவரும், வெலிசறையிலுள்ள கடற்படை பொது வைத்தியசாலையில் 216 பேரும், ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் 44 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இதேவேளை, மேலும் 105 பேர் 22 வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப் பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ22)

## வாரத்தில்...

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாடசாலைகள் நீண்ட நாள்கள் மூடப்பட்டமையால், பாடத்திட்டங்களை விரைவாக முடிக்க வேண்டும் என்பதனால் இந்த விடயம் தொடர்பாக ஆரா யப்பட்டு வருகிறது.
இது நடைமுறைக்கு வந்தால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 7 நாள்களும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறைந்தது 4 நாள்களுக்கு மட்டும் பாடசாலைகளுக்குச் சென்றால் போதும்.
மார்ச் 20 முதல் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக மொத்தம் 276 பாடசாலை நேரங்கள் இழக்கப்பட்டுள்ளன. மேலும் முடிவடையாத பாடத்திட்டங்களை எவ்வாறு முடிப்பது என்பது குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ளோம்.
கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு இந்த வாரம் மாகாண கல்வி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்த அவர்களின் யோசனைகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.(க)

## கைது...

தெரிவித்தார். அத்துடன் 13 ஆயிரத்து 504 வாகனங்கள் கைப்பற் றப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். கைதான வர்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டுள்ளன. 9 ஆயிரத்து 783 பேருக்கு எதிராக நீதிமன்றங்க ளில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள் ளன எனவும் அவர் தெரிவித்தார். (க)

## 382 பேர்...

தெரிவித்துள்ளது.
ஹோமாகம ஆதார வைத்தியசாலையி லிருந்து 7 பேரும், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையிலிருந்து 6 பேரும், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசா லையிலிருந்து 2 பேரும் மற்றும் தேசிய தொற்று நோய் வைத்தியசாலையிலி ருந்து ஒருவரும் இவ்வாறு குணம டைந்து வெளியேறியுள்ளனர். இதன் மூலம் நாட்டில் கொரோனா தொற்றுக் குள்ளாகி குணமடைந்த வர்களின் எண்ணிக்கையானது 382 ஆக உயர்வ டைந்துள்ளது. (க)

## கொழும்பு....

வர் அனில் ஜாசிங்க.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:
கொழும்பு, ஹம்பகா மாவட்டங்களில் விரைவில் ஊரடங்கு தளர்த்தப்படும். இறுக்கமான கட்டுப் பாடுகளுடனும் நிபந்தனைகளுடனும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விமான நிலை யங்களை மீண்டும் திறப்பதில் சிக்கல் உள்ளது. விமான நிலையங்களால் மீண்டும் வைரஸ் காவப்படும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன - என்றார். (ம)

## ராஜிதவைக் கைது...

30ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று காலை இரத்துச் செய்தது.
முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு கடந்த டிசம்பர் 24ஆம் திகதி பிடியாணை வழங்கப்பட்ட நிலையில் அவர் டிசம்பர் 26ஆம் திகதி லங்கா தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் டிசம்பர் 27ஆம் திகதி கைதுசெய் யப்பட்டார். அவர் டிசம்பர் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
வைத்தியசாலையில் தொடர்ந்தும் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு, டிசம்பர் 30ஆம் திகதி, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க உத்தரவிட்டது.
ஆயினும், குறித்த நீதிவான் நீதிமன்றத்தின் பிணை உத்தரவை எதிர்த்து, சட்டமா அதிபரால் கடந்த ஜனவரி 08ஆம் திகதி மீளாய்வு மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று காலை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் ராஜித சேனாரத்னவுக்கு வழங்கப் பட்ட பிணை உத்தரவை நீதிபதி மஞ்சுல திலகரத்ன இரத்துச் செய்தார்.
அத்துடன், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜெயரட்னவுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன உத்தரவிட்டார். இந்த நிலையிலேயே முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிர தான நீதிவான் லங்கா ஜெயரட்னவால் குற்றப் புலனாய்வுப் பிரிவி னருக்கு இன்று பிற்பகல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-22)

## மதுபான...

சட்டம் அமுலில் உள்ள கொழும்பு மற்றும் ஹம்பகா மாவட்டங்களில் மதுபானங்களை விற்பனை செய்வ தற்கான உரிமம் பெற்ற பல்பொ ருள் அங்காடிகளில் மாத்திரம் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (க)

## கும்பலாகக் குவிந்த

தடை போட்டிருந்த நிலையில், இன்று காலை 11 மணிக்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அறிவித்தல் வெளியான சிறிது நேரத்திலேயே 10 மணி முதல் 'குடிமக் கள்' மதுபானசாலைகள் முன்பாக ஒன்றுகூட ஆரம்பித்து விட்டனர். அவ்வாறு ஒன்று கூடியவர்கள் நீண்ட நேரம் காத்திருந்து மதுபானங்களைக் கொள்வனவு செய்தனர்.
இருப்பினும் நீண்ட நாள்களாகப் பூசைகள் இடம்பெறாதுள்ள ஆலயங்களில் அர்ச்சகர் உட்பட 10 பேர் மட்டுமே ஒன்றுகூட அனும திக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (க-105)

## திங்கள் முதல்

தார். மேலும், அத்தியாவசிய மற்றும் அவசர கடமைகளுக்கு செல்லவுள் ளோர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். பொதுப்போக்குவரத்து நடைமுறைகளை வழமைக்கு கொண்டு வர அரசாங்கம் முன்னெடுக்கும் நட வடிக்கைகள் குறித்து இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார். (ம)

ஐரோப்பிய ஆணைக்குழுவின்

# அதியுயர் அபாயப் பட்டியலில் இலங்கையின் பெயர் நீக்கம்

கொழும்பு,மே 13
ஐரோப்பிய ஆணைக்குழுவால் இந்த ஆண்டு வெளியிடப்பட்ட பணம் தூயதாக்கலைத்தடுத் தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை ஒழித்தல் உபாய ரீதியான குறைபாடுகளுடன் கூடிய உயர் இடர்நேர்வுமிக்க மூன்றாம் நிலை நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை நீக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் பண மோசடி மற்றும் தீவிரவாதி களுக்கு நிதி வசதியளிக்கின்றமை தொடர்பில் அதி உயர் அபாய நிலையிலுள்ள மூன்றாம் உலக நாடுகள் பட்டியலில் இலங்கை நீக்கப்பட்டுள்ள தாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கை அதிக ஆபத்துள்ள மூன்றாம் நாடுகளைக் கொண்ட பட்டியலிடப் பட்டது. அதன் பின்னர் இலங்கை நிதி நடவடிக் கைப் பணிக்குழு அதன் இணக்க ஆவணத்தில் மூலோபாய குறைபாடுகளைக் கொண்ட அதி கார வரம்பாக அடையாளம் காணப்பட்டது.
2017 ஆம் ஆண்டு சாம்பல் பட்டியல் என இலங்கை அடையாளம் காணப்பட்டது.
இவ்வாறு பட்டியலிடப்பட்டதும், அடையாளம் காணப்பட்ட மூலோபாய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு கால அளவிலான செயல் திட்டம் இலங்கைக்கு ஒதுக்கப்பட்டது.
நிதியியல் நடவடிக்கைச் செயலணியால் பட்டிய லிடப்பட்டதிலிருந்து, நிதி புலனாய்வு பிரிவு மற்ற பங்குதாரர்களுடன் சேர்ந்து, குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிதியியல் நடவடிக்கைச் செயலணி செயற்திட்டத்தை சிறப்பாகச் செயல் படுத்த தொடர்ச்சியான பயனுள்ள மற்றும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
அதன்படி, நிதியியல் நடவடிக்கைச் செயலணி யானது 2019 ஒக்ரோபர் மாதம் பாரிஸ் நகரில் நடைபெற்ற அதன் முழுநிறைவான அமர்வில், அதன் இணங்குவித்தல் அட்டவணையிலிருந்து சாம்பல் நிறப்பட்டியல் எனவும் அறியப்படு கின்ற இலங்கையை நீக்கியது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

## சுமந்திரனுக்கு

உருவப் பொம்மைக்கு செருப்புமாலை அணிவிக்கப்பட்டுள்ளது.
நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியை அண் மித்து இன்று காலை இந்தப் பொம்மை வைக்கப்பட்டு செருப்புமாலை அணி விக்கப்பட்டிருந்தது. அந்தப் பொம்மை யில் 'நான் ஒரு தமிழ் இன துரோகி' என்றும் எழுதப்பட்டிருந்தது.தகவலை யறிந்து அங்குசென்ற யாழ்ப்பாணப் பொலிஸார் செருப்புமாலை அணிவிக் கப்பட்டிருந்த சுமந்திரனின் உருவப் பொம்மையை அங்கிருந்து அகற்றி தமது வாகனத்தில் எடுத்துச் சென்றனர்.
சில தினங்களுக்கு முன்னர் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்துக்களைத் தெரிவித்திருந்த கூட்ட மைப்பின் ஊடகப்பேச்சாளர், விடுதலைப் புலிக ளின் ஆயுதப் போராட்டம் தொடர் பில் சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித் திருந்தார். இதனால் அவருடைய கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியிலும் பல எதிர்ப்புக்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-0,106)

# காணிப் பிணக்கு முறைப்பாடு மன்னாரில் அதிகரிப்பு

மன்னார், மே 13

மன்னார் மடுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல கிராமங்களில் போலிட் காணிகளை விற்பனை செய்வது மற்றும் இடம் பெயர்ந்து சென்றவர்களின் காணிகளையும் சேர்த்து வேலி அடைப்பது போன்ற பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இது தொடர்பில் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பொலிஸாரின் நடமாட்டங்கள் காரணமாக சில காலங்களுக்கு முன் மடுப்பகுதியில் அதிகரித்து காணப்பட்ட காட்டு விலங்குகள் வேட்டையாடுதல் மற்றும் மரக் கடத்தல் போன்ற குற்றச் செயல்கள் குறைந்துள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-213)

## சுகாதார நடைமுறைகளுடன்

# வவுனியாவில் திறக்கப்பட்டன சிகையலங்கார நிலையங்கள்



வவுனியா, மே 13

கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியாவில் பூட்டப்பட்டிருந்த சிகை யலங்கார நிலையங்கள் சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி இன்று திறக்கப்பட்டன.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிகையலங்கார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் சில விதிமுறைகள் விதிக்கப்பட்டு நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப் பட்டது.

சிகையலங்கரிப்பு நிலையத்தை நடத்துவதற்கான சான்றிதழ் சுகாதார மருத்துவ அதிகாரியிடம் பெறப்பட்டு காட்சிப்படுத்த வேண்டும், முடிவெட்டுதல் முடிக்கு நிறப்பூச்சு பூசுதல் மட்டுமே செய்யப் படவேண்டும், பணியாளர்களும் வாடிக்கையாளர்களும் சவர்க்கார மிட்டு கை கழுவுவதற்கான ஏற்பாட்டினை நிலையத்துக்கு உள்ளேயும், வெளியேயும் செய்தல் வேண்டும், பணியாளர்கள் கட்டாயமாக முகக் கவசம் மற்றும் பாதுகாப்புக் கண்ணாடி அணிந்திருக்கவேண்டும், காலினால் செயற்படுத்தப்படும் கழிவகற்றல் கூடை இருக்கவேண்டும் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இதனை பின்பற்றி சுகாதார வைத்திய அதிகாரிகளின் சிபாரிசை பெற்று வவுனியாவில் பெரும்பாலான சிகையலங்கார நிலையங்கள் இன்று திறக்கப்பட்டன. (ஐ-18)

# யானை தாக்கி பெண் உயிரிழப்பு

திருமலை, மே 13

திருகோணமலை, சம்பூர், தங்கபுரம் பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தங்கபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண், கூலித் தொழிலின் நிமித்தம் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# குளவி கொட்டி நால்வர் பாதிப்பு

சாவகச்சேரி, மே 13

குளவிக் கொட்டுக்கு இலக்கான மூன்று முதியவர்கள் உட்பட நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மழையுடன் வீசிய காற்றில் வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் அயலில் உள்ள வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்தவர்களைத் தாக்கியதாக தெரிவிக்கப் பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த நாகன் நடராசா (வயது 72) அவரது மனைவியான நடராசா இந்திராதேவி (வயது 66), சகோதரரான நாகன் வேலா யுதம் (வயது 84) மகளான பகீரதன் கலையரசி (வயது 42) ஆகியோரே குளவிக் கொட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-9)




# தனிமைப்படுத்தப்பட்ட 129 பேர் இன்று விடுவிப்பு

வவுனியா, மே 13

வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டிருந்த 129 பேர் இன்று விடுவிக்கப்பட்டனர்.

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடைய பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த அவிசாவளை, நுவர, குருநாகல், நாவலம்பிட்டி, கொழும்பு, கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 129 பேரே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இராணுவ பாதுகாப்புடன் 6 பஸ்களில் அவர்களது சொந்த இடங்களுக்குக் கொண்டு சென்று விடுவிக்கப்பட்டனர். (ஐ-18,110)

## குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

சாவகச்சேரி, மே 13

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மேலும் ஒரு குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஐ.எம்.எச்.ஓ நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக, புதிய குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தை வழங்கினர். அதனையடுத்து அங்கு சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# சுவிஸ் வர்த்தகக் குழுவால் 4.5 மில்லியன் நன்கொடை

கொழும்பு, மே 13

இலங்கையை மையமாகக் கொண்ட சுவிஸ் இலங்கை வர்த்தகக் குழு மற்றும் இலங்கையினது சுவிஸ் வர்த்தக வலயம் என்பன இணைந்து 4.5 மில்லியன் இலங்கை ரூபாவை அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணியினது கொவிட்19 கட்டுப்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டமைப்புக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட்19 உலகலாவிய தொற்றுநோய் என்பது தனித்துவமான உலகலாவிய சுகாதார நெருக்கடியாவதுடன், இதற்கு தேசிய எல்லைகளைக் கடந்த பதில் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

உலகம் முழுவதும் அரச நிறுவனங்கள், தனியார் துறைகள், சுகாதார சேவைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து கொவிட்19க்கு எதிரான போராட்டத்தில், அவர்களது வளங்களை ஒன்று திரட்டியுள்ளனர். இலங்கையின் நிலைமையும் இதுவாகும்.

இந்த நிலையிலேயே இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகம் இலங்கையை மையமாகக் கொண்ட சுவிஸ் இலங்கை வர்த்தகக் குழு, இலங்கையினது சுவிஸ் வர்த்தக வலயத்துடன் பங்குதாரராக இணைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவித்திருக்கிறது.

இரு நிறுவனங்களும் ஒன்றிணைந்ததாக 4.5 மில்லியன் இலங்கை ரூபாவை தேசிய ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களான அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணியினது கொவிட்19 கட்டுப்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டமைப்புக்கு நன்கொடையாக வழங்குகின்றது.

இந்த நிதியுதவியானது சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களுக்கும் உதவும்.

இத் தொகையில் தூதரக ஊழியர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பும் உள்ளடங்குவதுடன், இது இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுடனான எமது உண்மையான ஒத்துழைப்புக்குமான அடையாளமாகும்- என் றுள்ளது. (க)

# பெய்துவரும் மழையை அடுத்து
# டெங்கு நுளம்பு பெருகும் சூழல்!

## அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதி அறிவுறுத்தல்

சாவகச்சேரி. மே 13

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மூன்று தினங்களாக பெய்துவரும் மழையை அடுத்து டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயம் காணப்படுகிறது.



எனவே பொதுமக்கள் எச்சரிக்கையுடன் தமது குடியிருப்பு மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் ஒலிபெருக்கி மூலம் அனைத்து பிரிவுகளிலும் அறிவித்து வருகின்றனர்.

வருட ஆரம்பத்தில் மிக அதிகரித்த நிலையில் காணப்பட்ட டெங்கின் தாக்கம் பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்பினால் விரைவில் கட்டுப்படுத்த முடிந்தது. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு மனிதனுக்கு அருகில் மனிதனால் உருவாக்கப்படும் நீர் தேங்கும் இடங்களிலேயே பெருகிறது.

பிளாஸ்டிக். , பீங்கான் , தகரம் என்பவற்றினால் ஆக்கப்பட்ட பாத்திரங்கள் கூரைப் பீலிகள், நீர்த் தாங்கிகள், சிரட்டைகள் , இளநீர் கோம்பைகள், பூச்சாடிகள் மரப்பொந்துக்கள் , டயர்கள் , பறவைகளுக்கான நீர்த்தாங்கிகள், குளிர்சாதனப் பெட்டிகளின் நீரேந்தும் தட்டுக்கள், பாவிக்காத மலசலக்கூடங்கள் போன்றவற்றில் நுளம்புகள் முட்டையிட்டு நீர்தேங்கும் போது குடம்பிகளாக மாறிப் பெருகின்றன.

நுளம்பு பெருகாமல் இருப்பதற்கு கழிவுகளை அவற்றின் தன்மைக்கேற்ப வழக்கப்படுத்தி அகற்றுதல் வேண்டும் உக்கக்கூடிய கழிவுகளை வீட்டு வளவினுள்ளேயே புகைப்பதற்கு அல்லது எரிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.

உக்காத மீள்சுழற்சி செய்யக்கூடிய போத்தல்கள்,கண்ணாடிப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள் , உலோகத்தாலான கழிவுப் பொருள்கள் போன்றவற்றை உரப்பையில் இட்டு இறுக்கமாக வாய்ப்பகுதியைக் கட்டிய பின்னர் பிரதான வீதியோரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவகையில் வைத்து பிரதேச சபையின் வாகனம் வரும்போது ஒப்படைக்கவுமென சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ-9)



## பொங்கி வழிந்த ஆலயக் கிணறு!

மட்டக்களப்பு. மே 13

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள கிணற்றின் நீர் மட்டம் மேலெழுந்து, பொங்கி வழிந்த சம்பவம் இன்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று ஆலயத்தின் பிரதம குரு சிவ ஸ்ரீ மு.அங்குசசர்மா தெரிவித்தார்.

கிணற்றில் நீர் மட்டம் உயர்ந்து வழிந்தோடுவது தொடர்பாக ஆலயத்திற்குச் சென்ற ஆலய பிரதமகுரு குரு சிவ ஸ்ரீ மு. அங்குசசர்மா ஆலய நிர்வாகத்தினரிடம் தொலைபேசியில் தெரிவித்துள்ளார். பின்னர் சம்பவம் அறிந்த அப்பகுதி மக்கள் ஆலயத்திற்கு விரைந்து கிணற்றைப் பார்வையிட்டனர். இந்தச் செய்தி பரவலடைந்து, அதைக் காண்பதற்கு மக்கள் அங்கு திரண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் சம்பவ இடத்துக்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸார் மக்களைக் கட்டுப்படுத்தியுள்ள னர்.

பல ஆண்டுகளாக இந்த களுவாஞ்சிகுடி புண்ணிய பூமியிலே எமது மாணிக்கப்பிள்ளையார் அருள்பாலித்துக் கொண்டு பல அற்புதங்கள் நிகழ்த்தி வருகின்றார். அதுபோல் தற்போது எமது ஆலயத்தின் கிணற்றிலிருந்து நீர் வழிகின்ற அற்புதமானது இறைவனுடைய அருள்தான். இந்த அருள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என நான் மாணிக்கப்பிள்ளையாரிடம் வேண்டுகின்றேன் என்று ஆலயத்தின் பிரதம குரு சிவ ஸ்ரீ மு.அங்குசசர்மா தெரிவித்தார். (ப-150)

## புதைக்கப்பட்ட சடலம் மீளத் தோண்டியெடுப்பு

புத்தளம், மே 13

கடந்த வாரம் நல்லடக்கம் செய்யப்பட்ட சடலமொன்று நீதிமன்றத்தின் உத்தரவில் நேற்று செவ்வாய்க்கிழமை தோண்டியெடுக்கப்பட்டது.

முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிவாசல்பாடு கிராமத்தில் வசித்து வந்த மோசஸ் அப்புஹாமி என்பவரது சடலமே தோண்டியெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். மதுரங்குளி கரிக்கட்டைப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் நடந்த வாகன விபத்தில் குறித்த நபர் படுகாயமடைந்துள்ளார். அவர் உடனடியாக புத்தளம் தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

புத்தளம் மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் 28 நாள்கள் சிகிச்சை பெற்றுவந்த நபர், மே மாதம் 4 ஆம் திகதி கொழும்பு மருத்துவமனையில் இருந்து மீண்டும் புத்தளம் தள மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபருடைய சடலம் எவ்வித பிரேத பரிசோதனையும் மேற்கொள்ளாமல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சடலம் 5 ஆம் திகதி மதுரங்குளி கந்த தொடுவாய் ரோமன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, புத்தளம் மாவட்ட நீதிவான் லஹிரு என் சில்வா முன்னிலையில் சடலம் தோண்டியெடுக்கப்பட்டது. (க)



## வாழ்வாதார உதவி

வவுனியா,மே 13

வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள, தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, வரோட் அமைப்பினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அனந்த புளியங்குளம், மதியாமடு, நைனாமடு, சின்ன அடம்பன், புளியங்குளம் வடக்கு தெற்கு, கனகராயன்குளம் வடக்கு தெற்கு, மன்னகுளம், மாறஇலுப்பை, குளவி சுட்டான், ஒலுமடு, மருதோடை, கீரிசுட்டான், கற்குளம், பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணி வடக்கு தெற்கு ஆகிய 18 கிராமசேவை பிரிவுகளிலுள்ள 30 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. (க-222)

## சுற்றுலாத் துறையினருக்கு நிவாரணம் வழங்கத் திட்டம்

கொழும்பு,மே 13

சுற்றுலாத்துறையின் ஊடாக வருமானத்தை இழந்துள்ள அனைத்து தரப்பினருக்கும் நிவாரணம் வழங்குவதற்கான கோரிக்கை தொடர்பில், விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலாத் துறையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார். கொரோனா பரவல் காரணமாக சுற்றுலாத்துறையின் ஊடாக வருமானத்தைப் பெறும் அனைத்து தரப்பினரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்டு, இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.எம்.ஜுனுபர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட துறைசார் திணைக்களத் தலைவர்களுக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தார்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் இவ்வாறு அசாதரண நிலைமையால் பாதிப்படைந்துள்ளனர்.

ஆகவே இவர்களுக்கு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்காகவது தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண நிதி வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கடிதத்தில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)



# கிராம அலுவலருக்கு பொலிஸ் பாதுகாப்பு

## மஹிந்த ஆலோசனை

கொழும்பு,மே 13

கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அதிகாரி மற்றும் விவசாய திணைக்கள அதிகாரி ஆகியோரின் பாதுகாப்புக்குப் பொலிஸ் அதிகாரி ஒருவரை சேவையில் ஈடுபடுத்தப்படுவது சிறந்தது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலர் சங்கம் மற்றும் தொழிற்தரப்பினர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று சந்தித்தனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போது, கிராம அலுவலர் மற்றும் அரச அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டன.

"சேவையில் ஈடுபடும்போது அரச அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயவும், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும் பொலிஸ் அதிகாரி ஒருவரை சேவையில் ஈடுப்படுத்துவது சிறந்தது. பாதுகாப்பு முகக் கவசம் உட்பட இதர பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்." என்று பிரதமர் குறிப்பிட்டார். (க)

# கொரோனாவுடன் உலாவும் மக்கள்!

## தொற்று நோய் தடுப்புப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,மே 13

கொவிட் 19 வைரஸ் தொற்றுப்பரவல் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், எந்தவித அடையாளமும் காட்டாது தமது உடலில் வைரஸைக் காவிக்கொண்டு திரியும் மக்கள் நாட்டில் உள்ளனர் என்று தொற்றுநோய் தடுப் புப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

கொவிட் 19 வைரஸ் தொற்று நோய் குறித்த வைத்திய பரிசோதனைகள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் கொவிட் 19 வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் முதற்கொண்டு இந்த காரணிகளைக் கூறி வருகின்றனர்.

நாட்டில் வைரஸ் தொற்றாளர்களைத் தடுப்பதில் பாதிக்கப்பட்ட நபர்களை தேடிப் போய் கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், சமூக பரவலாக இது மாற்றமடைவது தடுக்கப்பட்டது. சமூகத்தில் பரவலாக நோயாளர்களைக் கண்டறிய முடியாது. ஆனால் சமூகப் பரவல் இல்லை என்ற காரணத்தால் மக்கள் சகஜமாக நடமாட முடியாது. மக்களின் உட லில் இன்னமும் கொரோனா வைரஸ் காவப்பட்டுக் கொண்டே உள்ளது. எந்தவித அடையாளமும் காட்டாது தமது உடலில் வைர ஸைக் காவிக்கொண்டு திரியும் மக்கள் நாட்டில் உள்ள னர்.

அவ்வாறான நிலையில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் செயற்பாடுகளில் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். மக்களிடம் இன்னமும் வைரஸ் உள்ளது என்பதை மனதில் வைத்துக் கொண்டு சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து செயற்பட வேண்டும்.

கொழுப்பு கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்கள் இன்னமும் வைரஸ் தொற்றுப் பரவல் அச்சுறுத்தல் உள்ள மாவட்டங்களாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த மாவட்டங்களில் ஊரடங்கு நீடிக்கப்பட்டாலும், மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் அனைத்தையும் முன்னெடுக்க தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலக வேலைகள் என அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டாலும் எப்போதாவது, எங்கோ ஒரு பகுதியில் கொவிட் 19 தொற்று நோயாளர் கண்டுபிடிக்கப்படுவார். அவ்வாறு அடையாளம் காணக்கூடிய அறிகுறிகள் தென்பட்டுக்கொண்டே உள்ளது- என்றார். (க)

# முல்லையில் அரச பேருந்துகள் சேவை

முல்லைத்தீவு, மே 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச பேருந்துகளின் சேவைகள் இடம்பெற்றாலும், வடக்கு மாகாணத்துக்குள் இன்று மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளே இடம்பெற்றிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தனியார் பேருந்துசேவைகள் எதுவும் இடம்பெறவில்லை.

அரச பேருந்துகளில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறை பணியாளர்கள், மருத்துத் தேவைகளுக்குச் செல்பவர்கள் மாத்திரம் பயணங்களை மேற்கொண்டிருந்தனர். (ப)

# வியாபாரம் செய்வதற்கு பிரதேச சபை இடையூறு

## வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று வியாபாரி கண்ணீர்

மன்னார், மே 13

மரக்கறி வியாபாரம் செய்வதற்கு பிரதேச சபை அனுமதியளிக்காமல் தொடர்ந்து பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என்றும், இதனால் தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் வியாபாரி ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார். அவருக்கு ஆதரவாக சக வியாபாரிகளும் குரல் கொடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மன்னார் முருங்கனில் இடம்பெற்றுள்ளது. அந்த இடத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட வியாபாரி தெரிவித்ததாவது;

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் காரணமாக ஏற்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் தொழில் வருமானம் இல்லாததால் முருங்கன் பகுதியில் சிறிய மரக்கரி கடை ஒன்று ஆரம்பித்து நடத்தி வந்த நிலையில் இவ்விடத்தில் வியாபாரம் செய்யவேண்டாம் என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் கூறுகிறார். ஏன் வியாபாரம் செய்ய வேண்டாம் என்ற முறையான காரணத்தையும் அவர் கூற மறுக்கிறார். தற்போதைய சூழலில் வேறு தொழில் எதுவும் இல்லாமல் சிரமப்படுகிறேன் - என்றார்.

இது தொடர்பாக நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த வியாபாரி நடத்தும் கடைக்கு அருகாமையில் பிரதேச சபையின் சந்தைக் கடைத் தொகுதி உள்ளது. அங்கும் மரக்கறி வியாபாரம் நடைபெறுகிறது. சந்தைத் தொகுதியில் வியாபாரம் செய்பவர்கள் குத்தகை அடிப்படையில் பணம் செலுத்தி வருபவர்கள். இவ்வாறான வியாபாரிகளால் அவர்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றார்கள்.

அத்துடன் பிரதேச சபையின் கடை ஒன்று இருந்தால் அதிலிருந்து அரைக் கிலோ மீற்றர் தூரத்தில் வேறு கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்று சட்டம் உள்ளது - என்றார். (ப-213)

# 'யங் ஸ்டார்' குருதித்தானம்

வவுனியா,மே 13

வவுனியா வைத்தியசாலையின் குருதி வங்கியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக, பல்வேறு தரப்பினரும் குருதித் தானம் செய்து வருகின்றனர்.

வைரவபுளியங்குளம் யங்ஸ்டார் விளையாட்டு கழகத்தினரால் இன்று குருதித் தானம் வழங்கப்பட்டது. கழகத்தின் தலைவர் ஜீவன் தலைமையில், கழகத்தைச் சேர்ந்த 42 அங்கத்தவர்கள் குருதிதானம் வழங்கினர். (க-110)



# தோட்டத்தில் கைக்குண்டு

சாவகச்சேரி, மே 13

தோட்டம் செய்யப்பட்ட காணியில் செய்கை பண்ணப்படாத சிறிய நிலப்பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு காணப்பட்டது.

சாவகச்சேரி வடக்கு சோலையம்மன் கோவிலடியில் உள்ள தோட்டத்தில் இன்று துப்புரவுப் பணிகளை மேற்கொண்ட போது, குண்டு அடையாளம் காணப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் மற்றும் படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு வந்த பொலிஸாரும், படையினரும், நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். தோட்டம் செய்த காணியில் விடப்பட்டிருந்த சிறிய காணித்துண்டைப் பண்படுத்திய போது, மண்வெட்டியில் ஏதோ பொருள் தட்டுப்பட்டு வெளியே வந்தது. அதனை எடுத்துப் பார்த்த போது கைக்குண்டு எனத் தெரிந்ததால் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று விவசாயி தெரிவித்தார். (க-9)



## மருத்துவமனை சென்ற
# கர்ப்பிணிப் பெண்ணை நடக்க வைத்த பொலிஸ்

யாழ்ப்பாணம், மே 13

முச்சக்கரவண்டி ஒன்றில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்ற கர்ப்பிணிப் பெண் ஒருவரையும், முதியவரையும், முச்சக்கரவண்டியிலிருந்து இறக்கி நடக்க வைத்துள்ளனர் பொலிஸார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றுள்ளது. கர்ப்பிணிப் பெண்ணும், அவரது உறவினரான முதியவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காகச் சென்றுள்ளனர். அவர்கள் மணிக்கூட்டு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் பொலிஸாரால் மறிக்கப்பட்டு, அங்கிருந்து நடந்தே செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் நடந்தே மருத்துவமனைக்கு சென்றுள்ளனர். குறித்த வீதி மறியல் கொரோனா அசாதாரணநிலை காரணமாக தற்காலிகமாக அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, உள்ள வீதியில் இந்த வீதி மறியல் அமைக்கப்பட்டு அந்த வீதி ஊடாக வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. (ஐ-7)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு, மே 14

நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி கசிப்பு உற்பத்தி செய்யப்பட்ட நிலையம் ஒன்று மட்டக்களப்பு மதுவரித் திணைக்களத்தினால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பார் வீதியில் சீலாமுனை பகுதியொன்றில் உள்ள வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது நான்கு போத்தல்களில் இருந்த 2 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்தி மூலப்பொருள் கலவைகள் 10ஆயிரம் மில்லி லீற்றர் என்பன கைப்பற்றப்பட்டன என்று மட்டக்களப்பு மதுவரித் திணைக்களத்தின் பிரதான பரிசோதகர் எஸ். ரஞ்சன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# நந்திக்கடல் சீரமைப்பை தீவிரப்படுத்த நடவடிக்கை

முல்லைத்தீவு, மே 13

நந்திக்கடல் நாயாறு மற்றும் தொண்டமானாறு ஆகிய களப்புக்களை சீரமைக்கும் பணிகளை விரைவுபடுத்துவதற்கு ஆலோசனைகளை கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொவிட் 19 காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால், சீரமைப்பு நடவடிக்கைகளில் தாதமதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

நாரா எனப்படும் நீர்வாழ் உயிரின ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதி, அகழப்படுகின்ற சேற்று மணலைக் கொட்டுகின்ற இடத்தைத் தெரிவு செய்து அங்கு கொட்டுவதற்கான சுற்றுச் சூழல் திணைக்களத்தின் அனுமதி மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், கரையோர பாதுகாப்பு அதிகார சபை ஆகியவற்றின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாயாறு மற்றும் நந்திக்கடல் நீர் நிலைகளில் சுனாமி அனர்த்தத்தால் கரையொதுக்கப்பட்ட பெருமளவு ஆழ்கடல் பொருள்களும், மணல் படுக்கைகளும் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் களப்புப் பிரதேசத்தில் நீர்வாழ் உயினங்களின் உற்பத்தி குறைவடைந்துள்ளது. நீர்நிலைகளை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற பிரதேச மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை தொண்டமானாறு களப்பினுள் பழைய பாலம் ஒன்று விழுந்து காணப்படுவதால், அதனை அகற்றுவதற்குத் தேவையான 20 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. (க)



# சில நாள்கள் மழை தொடரும்

கொழும்பு, மே 13

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக, அடுத்த சில நாள்கள் நாடு முழுவதும் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் தென் மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். மத்திய, சப்ரகமுவ, ஊவா, தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும். காலியிலிருந்து மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான ஆழம்கூடிய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று அவதான நிலையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மழையால் கிளினிக் இன்றி வீடு திரும்பிய கர்ப்பிணிகள்

சாவகச்சேரி, மே 13

கர்ப்பவதிகளுக்கான கிளினிக் நடத்தும் மண்டபத்தின் கூரை பழுதடைந்ததால், கிளினிக் வந்த கர்ப்பவதிகள் மழை ஒழுக்கின் காரணமாக ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய சம்பவம் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய மண்டபத்தில் மாதத்தில் ஒருநாள் கர்ப்பவதிகளுக்கான கிளினிக் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்படுகின்றது. நேற்று செவ்வாய்க்கிழமை கிளினிக்குக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சுகாதார திணைக்கள அதிகாரிகளும், கர்ப்பவதிகளும் வருகை தந்திருந்தனர். முற்பகல் 9.30 மணியளவில் திடீரென மழை பெய்ததால் மண்டபத்தினுள் நிற்கமுடியாத அளவுக்கு ஒழுகிக் கொண்டு இருந்தன. இதனால் கிளினிக் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. கிளினிக் நடைபெறாமல் கர்ப்பவதிகள் வீடுகளுக்குத் திரும்பினர் . சேதமடைந்து காணப்படும் கூரையினைத் திருத்தம் செய்து தருமாறு அதிகாரிகளினாலும் கர்ப்பவதிகளாலும், பலதடவைகள் நிலைய நிர்வாகத்தினருக்கு அறிவித்தபோதிலும் இதுவரை திருத்தம் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

# நீதிமன்றில் தீ விபத்து

கொழும்பு, மே 13

மாத்தறை, தெய்யந்தர நீதிமன்ற கட்டடத்தின் சேமிப்பு அறையொன்றில் இன்று புதன்கிழமை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீக்கான காரணம் கண்டறியப்படவில்லை. விபத்தில் பல ஆவணங்கள் தீக்கிரையாகியுள்ளன. பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 13.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.